FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, யூலை- 2015
## Term Examination, July - 2015

| தரம் :- 12 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி - I

➢ **மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01) திருச்சபையில் முதல் நியமனம் பெற்ற பணியாளர்கள்
1) திருத்தூதர் 2) திருத்தொண்டர் 3) மூப்பர்
4) பேயோட்டிகள் 5) வாசகர்

02) அந்தியோக்கியாவில் பவுலால் மனமாற்றப்பட்டவரும் "அன்பு மகன்" என அழைக்கப்பட்டவரும் யார்?
1) திமோத்தேயு 2) நீத்து 3) பர்ணபா
4) சீலா 5) லூக்கா

03) ஆரம்பகால துறவற வாழ்வில் இடம்பெறாத விடயம்
1) நீண்ட நேரம் செபத்தில் ஈடுபடல்
2) நோன்பு இருத்தல்
3) உடல் உழைப்பில் ஈடுபடல்
4) குழுவாக செபித்தல்
5) விவிலியத்தைப் பிரதியெடுத்தல்

04) துறவற குழும வாழ்வு ஆரம்பிக்கப்பட்ட காலப்பகுதி
1) கி. பி. 320 - 325 2) கி. பி. 326 - 345
3) கி. மு. 320 - 325 4) கி. மு. 415 - 420
5) கி. பி. 481 - 390

05) நான்காம் சிலுவைப் போர் இடம்பெற்ற காலம்
1) 1015 - 1017 2) 1147 - 1187 3) 1202 - 1204
4) 1187 - 1189 5) 1096 - 1099

06) சிஸ்ரேஷியன் சபைக்கான ஒழுங்கு விதிகளை தொகுத்தவர்
1) புனித றொபேட் 2) பெர்னாந்து 3) புனித அல்பிறிக்
4) முடியப்பர் 5) மடுத்தீனார்

07) சுதேச குருக்களின் உருவாக்கத்திற்கு வித்திட்டவர் யார்?
1) புனித பொணிபஸ் 2) புனித பத்திரிசியார் 3) புனித ஆன்ஸ்கார்
4) புனித கொலம்பான் 5) புனித கிரகோரியார்

08) A - தூய்மைவாதிகள் என அழைக்கப்பட்டனர்
B - அமெரிக்கன் புரட்சி இவர்களை இங்கிலாந்திலிருந்த அங்கிலிக்கன் சபையிடமிருந்து பிரித்து விட்டது.
இக்கூற்றுக்களுக்கு பொருத்தமான சபை எது?
1) பப்ரிஸ்ற் சபை 2) மெதடிஸ்த சபை 3) இரட்சணிய சேனை

4) இங்கிலாந்து சபை 5) லூத்திரன் சபை

09) "கடவுளிடமிருந்து பெருங்காரியங்களை எதிர்பாருங்கள்" எனும் கூற்றுக்கு பொறுப்பானவர்
1) தொமஸ் முன்ந்சர் 2) ஜோண் கல்வின் 3) மாட்டீன்
4) வில்லியம் கேரி 5) ஜோண் வெஸ்லி

10) "கத்தோலிக்க பிரசுரங்களின் பாதுகாவலர்" எனப் போற்றப்படுபவர் யார்?
1) புனித பிரான்சிஸ் சவேரியார்
2) புனித அவிலா திரேசாள்
3) புனித பீற்றர் கனீசியஸ்
4) புனித ஆஞ்சலா
5) புனித வின்சென்ற் தே போல்

11) கிழக்காசியாவிலேயே கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடு எது?
1) இந்தியா 2) பிலிப்பைன்ஸ் 3) கொரியா
4) ஜப்பான் 5) சீனா

12) இந்தியாவுக்கு வருகை தந்த றொபேட் தே நோபிலி எந்த துறவற சபையைச் சேர்ந்தவர்
1) இயேசு சபை 2) பிரான்சிஸ்கன் சபை 3) அகுஸ்தீனார் சபை
4) வின்சென்சியன் சபை 5) கார்மேல் சபை

13) இரட்சணிய சேனை என்னும் பிரிவினை சபை இங்கிலாந்தில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
1) கி. பி. 1452 2) கி. பி. 1526 3) கி. பி. 1580
4) கி. பி. 1625 5) கி. பி. 1878

14) இலங்கையில் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயம் எது?
1) புனித தோமையார் சிற்றாலயம்
2) புனித லவுறேஞ்சியார் சிற்றாலயம்
3) புனித பற்றீசியன் சிற்றாலயம்
4) புனித ஹென்றி சிற்றாலயம்
5) புனித அந்தோனியார் சிற்றாலயம்

15) கூற்று :- ஜப்பானில் கத்தோலிக்கரின் தொகை மிக விரைவாக வளரத் தொடங்கியது
காரணம் :- புனித பிரான்சிஸ் சவேரியாரின் வருகை
1) கூற்றும், காரணமும் பிழை
2) கூற்றும், காரணமும் சரி
3) கூற்று சரி, காரணம் பிழை
4) கூற்றும், காரணமும் தொடர்பற்றவை
5) தீர்மானிக்க முடியாது

16) A - இலத்தீன் திருச்சபை
B - சீரோ மலபார் திருச்சபை
C - சீரோ மலங்கரா திருச்சபை
D - கீழைத்தேய திருச்சபை
E - மலங்கார் வைதீக திருச்சபை
மேற்குறிப்பிட்ட தரவின் படி இன்று இந்திய கத்தோலிக்க திருச்சபையில் அங்கம் வகிக்கும் 3 தனிப்பட்ட திருச்சபைகள் எவை?
1) ABC 2) ABE 3) ACD 4) AEC 5) ABD

17) ஆங்கிலேயர் காலமாக கொள்ளப்படுவது எது?
1) கி. பி. 1505 - 1657 2) கி. பி. 1657 - 1796
3) கி .பி. 1796 - 1948 4) கி. பி. 1948 - 1800

5) கி. பி. 1596 - 1648

18) மத்தேயு ரிச்சி அடிகளாரினால் திருமுழுக்குப் பெற்ற முதல் அரச உத்தியோகத்தர்
1) கிரென்மர் 2) வில்லியம் வாட் 3) மைக்றோ
4) மனசரன் 5) போல்நுசு

19) “கொஸ்மஸ் இன்டிக்கோ பிளாஸ்தர்” எழுதிய நூலின் பெயர்
1) கிறிஸ்தவ சபைகளின் விவரணம்
2) புனிதத்துவத்தின் வழி
3) புனிதர்களின் வாழ்க்கை
4) ஆன்மாவின் கோட்டை
5) சீர்பெற்ற வாழ்விற்கு வழி

20) கிறிஸ்தவ மறையை இந்தியாவுக்கு முதலில் கொண்டு வந்தவர்
1) திருத்தூதரான தூய யூதா
2) திருத்தூதரான தூய பார்தலேமேயு
3) தூய பிரான்சிஸ் சேவியர்
4) தூய ஜோண் பொஸ்கோ
5) திருத்தூதரான தூய தோமையார்

(20 x 1 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

❖ **பகுதி ‘அ’ இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும், பகுதி ‘ஆ’ இல் இருந்து எவையேனும் இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக 4 வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

### பகுதி - ‘அ’

01)
i) தூய ஆவியின் வருகையைத் தொடர்ந்து திருத்தூதர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் 4 தருக.
ii) ஆதிக் கிறிஸ்தவ சமூகத்தில் இணைந்து கொண்ட முதல் புற இனத்தவரையும், இவர் தொடர்பில் பேதுரு கண்ட காட்சியையும் தருக.
iii) கிறிஸ்தவ மறையைக் கட்டியெழுப்புவதில் பங்காற்றிய திருச்பைத் தந்தையர்கள் 4 பேரின் பெயர்கள் தருக.
iv) புனித கொலம்பா, புனித பொனிபாஸ் இவர்களின் பணிகள் 2 பற்றி விளக்குக.
v) பின்வரும் கால கட்டங்களில் மன்னன் கொன்ஸ்தாந்தினுடன் தொடர்புடைய நிகழ்வுகளைத் தருக.
கி. பி. 312, கி. பி. 313 கி. பி. 330 கி. பி. 3387

02)
i) 5ம் கலாபாவனைக்குரிய காலப்பகுதியையும், அதற்கு காரணமான பேரரசனையும், அதில் வேதசாட்சிகளாக மரித்தவர்களையும் தருக.
ii) பவுலின் 2ம் தூதுரைப் பயணத்தின் போது பிலிப்பியில் நடந்த சம்பவங்கள் 4 தருக.
iii) பவுலின் தூதுரைப் பயணங்களின் முக்கிய குறிக்கோள்கள் 4 தருக.
iv) கீழைத்தேய, மேலைத்தேய துறவற வாழ்வுக்கு வித்திட்ட நபர்கள் நால்வரை ஒழுங்கு முறையாகத் தருக.

v) திருச்சபை பேரரச மதமாக்கப்பட்டதால் திருச்சபைக்கு ஏற்பட்ட நன்மைகள் 2 தீமைகள் 2 தருக.

*03)*

i) துறவறத்தால் திருச்சபைக்கு கிடைத்த நன்மைகள் 4 தருக.

ii) திருச்சபையின் துறவற வாழ்வின் வளர்ச்சியிலே பல்வேறு படிநிலைகளை காண்கின்றோம். அவற்றில் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக.

iii) ஆசீர்வாதப்பர் துறவற சபையில் காணப்பட்ட பண்புகள் 4 தருக.

iv) கல்வின் ஜெனிவா நகரில் மேற்கொண்ட சீர்திருத்தச் செயற்பாடுகள் 4 தருக.

v) திருச்சபையின் மாற்றுச் சீர்திருத்தத்தில் பங்களிப்பு செய்த திருத்தந்தையர்கள் 4 பேரின் பெயர்களைக் கூறி ஒருவரைப் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

## பகுதி - 'ஆ'

*04)*

i) குளுணி துறவற சபையின் தோற்றம், அச்சபையின் சிறப்புப் பண்புகளை விளக்குக.

ii) மாட்டீன் லூதரின் வாழ்க்கை வரலாறு பற்றி விளக்குக.

iii) இக்னேசியஸ் லொயலாவினால் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தப் பணிகளை விபரிக்குக.

iv) கார்மேல் சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய அவிலா திரேசாவின் பணி வாழ்வை விளக்குக.

*05)*

i) சீனாவில் கிறிஸ்தவ திருச்சபைக்கு மத்தேயுரிச்சி அடிகளார் ஆற்றிய பங்களிப்பினை விளக்குக.

ii) இந்தியாவில் கிறிஸ்தவ மறையின் ஆரம்பம் பற்றி 4 விடயங்கள் தருக.

iii) சீரோ மலபார், சீரோ மலங்கார திருச்சபை பற்றி அறிமுகம் செய்க.

iv) இந்திய இலத்தீன் திருச்சபையின் வழிபாட்டு முறைகள் 5 தருக.

*06)*

i) கி. பி. 6ம் நூற்றாண்டில் இலங்கையில் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான வரலாற்று ஆதாரங்கள் 5 தருக.

ii) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர் அனுபவித்த இன்னல்களை விளக்குக.

iii) ஒல்லாந்தர் காலத்தில் யோசுவாஸ் அடிகளாரின் மறைப் பணியினை விளக்குக.

iv) யாக்கோமே கொன்சால்வேஸ் அடிகளாரின் இலக்கியப் பணியை விபரிக்குக.

*07)*

i) 4ம், 5ம் நூற்றாண்டுகளில் தோன்றிய பேதகங்களை வகைப்படுத்தி அவற்றில் அடங்கும் பேதகங்களை எழுதுக.

ii) சிலுவைப் போர் ஏற்பட்டதற்கான காரணங்கள் 5 தருக.

iii) கப்புச்சின் துறவற சபையினர் திருச்சபைக்கு ஆற்றிய பணிகள் 5 தருக.

iv) ஜோண் வெஸ்லி தோற்றுவித்த சபையின் முக்கிய விடயங்கள் 5 தருக.